புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat,
Near KFC Moolakulam,
Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635
T/PN/2025/1216/7215/1419

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 ● இதழ்: 238 ● 04-03-2026 ● புதன் ● பக்கம்- 4 ● விலை- ரூ.5 ● திருச்சி- புதுச்சேரி
Volume 01 ● Issue: 238 ● 04-03-2026 ● Wednesday ● Pages - 4 ● Price- Rs. 5 ● Trichy-Puducherry

## போர் நிறுத்தம் குறித்து இஸ்ரேலுடன் பிரதமர் மோடி பேச்சு: 90 லட்சம் இந்தியர்களை பாதுகாக்க நடவடிக்கை



புதுடெல்லி: மார்ச்.4–

அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையிலான போர் தீவிரமாக நடந்து வருவதால், மத்திய கிழக்கு நாடுகளில் பதற்றமான சூழ்நிலை நிலவுகிறது. அந்த நாடுகளில் வசிக்கும் 90 லட்சம் இந்தியர்களின் பாதுகாப்பு குறித்து பிரதமர் மோடி தலைமையில் பாதுகாப்புக்கான அமைச்சரவைக் குழு அவசர ஆலோசனை நடத்தியது.

இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவிடம் தொலைபேசியில் பேசிய மோடி, விரைவில் போர் நிறுத்தம் செய்து, அமைதியை ஏற்படுத்துமாறு வலியுறுத்தினார்.

அணு ஆயுத தயாரிப்பை நிறுத்த வேண்டும் என்பதை ஏற்க மறுத்த ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் ராணுவம் இணைந்து போர் தொடுத்தன. இந்த தாக்குதலில் ஈரான் தலைவர் அயத்துல்லா அலி காமேனி உயிரிழந்தார்.

இதற்கு பதிலடியாக இஸ்ரேல், அமெரிக்க ராணுவ முகாம்கள் உள்ள அண்டை நாடுகளான கத்தார், பஹ்ரைன், ஐக்கிய அரபு அமீரகம், சவுதி அரேபியா ஆகிய நாடுகள் மீது ஏவுகணைகள், ட்ரோன்களை வீசி ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது.

350 விமான சேவைகள் ரத்து: இதனால், மத்திய கிழக்குப் பகுதியில் உள்ள 11 நாடுகளில் வான்எல்லைகள் மூடப்பட்டுள்ளன. இந்திய விமான நிறுவனங்கள் 350 சர்வதேச விமான சேவைகளை ரத்து செய்துள்ளன. மத்திய கிழக்கு நாடுகளில் 90 லட்சம் இந்தியர்கள் வசிக்கின்றனர். இவர்களது பாதுகாப்பு குறித்து பிரதமர் மோடி தலைமையில் பாதுகாப்புக்கான அமைச்சரவைக் குழு நேற்று முன்தினம் இரவு அவசர ஆலோசனை நடத்தியது.

24 மணிநேர உதவி மையங்கள்: வெளிநாட்டு விமான நிலையங்களில் சிக்கித் தவிக்கும் இந்தியர்களை பாதுகாப்பான இடங்களில் தங்கவைப்பது, அவசரநிலை ஏற்பட்டால் மீட்பதற்கான ஏற்பாடுகளை செய்வது ஆகியவை குறித்து இதில் முக்கிய ஆலோசனை நடத்தப்பட்டது. ஈரான் தலைநகர் டெஹ்ரான், இஸ்ரேலின் டெல் அவிவ், அபுதாபி, துபாய் ஆகிய இடங்களில் 24 மணி நேர உதவி மையங்கள் ஏற்படுத்தப்பட்டு, இந்தியர்களுக்கு தேவையான உதவிகளை தூதரக அதிகாரிகள் செய்து வருகின்றனர்.

வெளிநாடுகளில் படிக்கும் இந்திய மாணவர்களின் பாதுகாப்பு குறித்தும் இந்த கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. போரால் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளில் வசிக்கும் இந்தியர்களுக்குத் தேவையான உதவிகளை செய்ய சம்பந்தப்பட்ட துறைகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. கடல்சார் வர்த்தக வழித்தடத்தில் ஏற்பட்டுள்ள இடையூறுகள், நாட்டின் எரிசக்தி பாதுகாப்பு, வர்த்தக நடவடிக்கைகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

தலைவர்களிடம் கோரிக்கை: இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவிடம் தொலைபேசியில் பேசிய பிரதமர் மோடி, மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள பதற்றம் குறித்து கவலை தெரிவித்தார். இந்தியர்களின் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் அளிப்பது குறித்து வலியுறுத்திய மோடி, போர் நிறுத்தம் செய்து விரைவில் அமைதியை ஏற்படுத்துமாறும் வேண்டுகோள் விடுத்தார்.

இதேபோல, ஐக்கிய அரபு அமீரகத்தலைவர் ஷேக் முகமது பின் ஜயீத்அல்நஹ்யானுடனும் பிரதமர் மோடி பேசினார். அந்நாட்டின் மீதான தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்த பிரதமர் மோடி, ஐக்கிய அரபு அமீரகத்துக்கு துணை நிற்பதாகவும் தெரிவித்தார். அங்கு இந்தியர்களின் பாதுகாப்புக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு நன்றி தெரிவித்தார். மத்திய கிழக்கில் அமைதி, நிலைத்தன்மை ஏற்பட இந்தியா ஆதரவு அளிப்பதாகவும் கூறினார்.

பஹ்ரைன் மன்னர் ஹமாத் பின் இஷா அல் கலிபாவிடம், தாக்குதல் குறித்த தனது கவலையை தெரிவித்த பிரதமர் மோடி, அங்கு உள்ள இந்திய மக்களின் பாதுகாப்புக்கு தேவையான உதவிகளை செய்யுமாறும் கேட்டுக் கொண்டார்.

பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண மோடி வலியுறுத்தல்: டெல்லியில் இந்தியா கனடா இடையே 8 முக்கிய ஒப்பந்தங்கள் நேற்று கையெழுத்தாகின. இதைத் தொடர்ந்து, பிரதமர் மோடியும், கனடா பிரதமர் மார்க் கார்னியும்கூட்டாகசெய்தியாளர்களை சந்தித்தனர்.

அப்போது, பிரதமர் மோடி கூறியதாவது: மத்திய கிழக்கில் நிலவும் பதற்றம் குறித்து இந்தியா ஆழ்ந்த கவலை அடைந்திருக்கிறது. உலகம் முழுவதும் அமைதியும், ஸ்திரத்தன்மையும் நிலவ வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். எந்த பிரச்சினைக்கும் அமைதிப் பேச்சுவார்த்தை, ராஜ்ஜிய ரீதியிலான அணுகுமுறை மூலமாக மட்டுமே தீர்வு காணவேண்டும்.

இந்தியா, கனடா மட்டுமின்றி, ஒட்டுமொத்த மனித குலத்துக்கும் தீவிரவாதம் மிகப்பெரிய சவாலாக மாறியுள்ளது. தீவிரவாதத்தை வேரறுக்கவும், உலகில் அமைதி நிலைக்கவும் இந்தியாவும், கனடாவும் ஒன்றிணைந்து செயல்படும். இந்தியப் பெருங்கடல் பசிபிக் பிராந்தியத்தில் இரு நாடுகளும் ஏற்கெனவே இணைந்து செயல்பட்டு வருகின்றன. இவ்வாறு அவர் தெரிவித்தார்.



அமைச்சர் முத்துசாமி ஈரோடு மாவட்டம், அந்தியூர் சிறப்புநிலை பேரூராட்சி, சமுதாயக் கூடத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் பயனாளிகளுக்கு நிபந்தனை பட்டாக்களை அயன்பட்டாவாக மாற்றி வீட்டுமனைப்பட்டாக்களை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் வெங்கடாச்சலம், ஈரோடு கிழக்கு சந்திரகுமார் உட்பட பலர் உள்ளனர்.

# பொருளாதார வளர்ச்சி, மனித வளர்ச்சியில் தமிழ்நாடு முதல் மாநிலம்; பாஜ ஆளும் மாநிலங்களில் இப்படி ஒரு வளர்ச்சியை காட்ட முடியுமா..?

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சவால்



சென்னை: மார்ச்.4–

பொருளாதார வளர்ச்சியில் மட்டுமல்ல, மனித வளர்ச்சி குறியீட்டிலும் இந்தியாவின் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது என்பதுதான் எங்களின் பெருமைக்குரிய தனித்தன்மையாக விளங்கிக்கொண்டிருக்கிறது. இந்தியா முழுவதும் பா.ஜ. ஆளும் மாநிலங்களில், அதாவது டபுள் இன்ஜின் என்று சொல்லும் டப்பா இன்ஜின் ஓடும் மாநிலங்களில் இப்படி ஒரு வளர்ச்சியை காட்டிட முடியுமா என முதல்வர் மு.க.ஸ்டாலின் பாஜவுக்கு சவால் விடுத் துள்ளார்.இந்திய செய்திகள்

சென்னையில் தனியார் நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்துகொண்டு பேசியதாவது: தமிழ்நாட்டில் எல்லா மாவட்டத்திலும் டைடல் பார்க் இருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், இரண்டாம் நிலை மாநகரங்களில் கூட நியோ டைடல் பார்க், எல்காட் போன்றவை அமைக்கப் பட்டிருக்கிறது. இந்த ஆட்சியே மகளிர் மற்றும் மாணவர்களுக்கான ஆட்சி என்று சொல்லும் அளவிற்கு திராவிட மாடல் அரசின் முத்திரைத் திட்டங்கள் எல்லாமே அவர்களுக்காகதான் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

நாங்கள் இப்படி ஆல் ரவுண்டராக அடித்து ஆடுவதால்தான், இந்தியாவிலேயே பொருளாதார வளர்ச்சியில் நம்பர் ஒன் மாநிலம் தமிழ்நாடு என்று ஒன்றிய பா.ஜ. அரசே பாராட்டி சொல்லியிருக்கிறது. நம்பர் ஒன் மாநிலம் மட்டுமல்ல, இரட்டை இலக்க வளர்ச்சியை எட்டிய ஒன் ஆண்டு ஒன்லி மாநிலமும் தமிழ்நாடுதான். பொருளாதார வளர்ச்சியில் மட்டுமல்ல, மனித வளர்ச்சி குறியீட்டிலும் இந்தியாவின் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது என்பதுதான் எங்களின் பெருமைக்குரிய தனித்தன்மையாக விளங்கிக்கொண்டிருக்கிறது.

இந்தியா முழுவதும் பா.ஜ. ஆளும் மாநிலங்களில், அதாவது டபுள் இன்ஜின் என்று சொல்லும் டப்பா இன்ஜின் ஓடும் மாநிலங்களில் இப்படி ஒரு வளர்ச்சியை காட்டிட முடியுமா? முடியவே முடியாது. அவர்கள் செய்வதெல்லாம் வன்முறை, வெறுப்பு பேச்சு, பிற்போக்கு வாதம். இதற்கு அப்படியே நேர்மாறான, முற்போக்கு அரசு எங்கள் திராவிட மாடல் அரசு. முக்கியமாக நீங்கள் குறித்துக்கொள்ள வேண்டியது, நாங்கள் செய்த சாதனைகளையெல்லாம் ஒன்றிய அரசின் உதவி இல்லாமலேயே சாதித்திருக்கிறோம். இன்னும் சொல்ல போனால் அவர்களின் நெருக்கடிகளை மீறி சாதித்திருக்கிறோம்.

மதுரை வந்த பிரதமர் மோடி, மதுரவாயல் துறைமுகம் மேம்பாலப் பணிகள் தாமதம் பற்றி குற்றம் சாட்டி அதை குறிப்பிட்டு பேசியிருக்கிறார். அவர் கூட்டணி வைத்திருக்கும் அதிமுக தான் இந்த திட்டம் வரக்கூடாது என்று தடை செய்தார்கள். வழக்கிலும் வாதாடினார்கள். இந்த பணிகள் நாங்கள் வந்து, இந்த ஒன்றிய அரசிடம் சொல்லி இப்போதுதான் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது.

திமுக ஆட்சி என்றால் வளர்ச்சி. வளர்ச்சி என்றால் திமுக ஆட்சி என்பது தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றாக தெரியும். இருந்தாலும், பிரதமர் மோடிக்கு சொல்ல சாதனைகள் இல்லாததால், தேர்தல் நேரத்தில் பொய்யை அவிழ்த்து விட்டிருக்கிறார்.

இதை விட பெரிய காமெடியும் மேடையில் அவர்கள் பேசும்போது நடந்தது. என்னவென்றால், பழனிசாமி 'அ.தி.மு.க. ஆட்சி அமைக்கும்' என்று சொல்கிறார். அவரை மேடையில் வைத்துக் கொண்டே, பிரதமர் மோடி 'என்டிஏ ஆட்சி' அமையும் என்று சொல்கிறார். யாருக்கு யார் தலைமை என்றே தெரியாமல்தான் இவர்கள் கூட்டணி இருக்கிறது.

அதனால்தான், நான் என்னுடைய பிரசாரத்தை தொடங்கியபோதே இந்த தேர்தல் தமிழ்நாடுக்கும் என்டிஏ என்று தெளிவாக சொன்னேன்.

இதை நான் சொன்னபோது சிலர் கேள்வி எழுப்பினார்கள். ஆனால், பிரதமர் மோடி உள்துறை அமைச்சர் அமித்ஷா ஒவ்வொரு முறை தமிழ்நாட்டிற்கு வரும்போதும் நான் சொன்னதை உறுதிப்படுத்தி செல்கிறார்கள். தமிழ்நாடு அணியா, டெல்லி அணியா என்ற இந்த தேர்தலில் நிச்சயம் தமிழ்நாடு வெல்லும். அந்த திராவிட மாடல் 2.0வில் எங்கள் ரெக்காடையை நாங்களே முறியடிப்போம். இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சிக்கு பின்னர் நிருபர்கள் கேள்விக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிலளித்தார்.

அவை வருமாறு:

உங்கள் தலைமையில் ஒரு மெகா கூட்டணியை கட்டி அமைத்திருக்கிறீர்கள். உங்களை விமர்சித்தவர்கள், எதிர்த்தவர்கள் உங்கள் தலைமையின் கீழ் வந்திருக்கிறார்கள். இந்த சவாலை எப்படி சமாளிக்கப்போகிறீர்கள்?

இது எண்ணிக்கையில் அமையப்பெற்ற கூட்டணி அல்ல. எண்ணத்தால் உருவாக்கப்பட்டிருக்கும் கூட்டணி. தமிழ்நாட்டில் இந்த கூட்டணி நாடாளுமன்ற தேர்தல், சட்டமன்றத் தேர்தல், உள்ளாட்சித் தேர்தலில் தொடர்ந் துக்கொண்டிருக் கிறது. இப்போது அமைய இருக்கும் கூட்டணியிலும் இன்னும் பல கட்சிகள் இணைந்திருக்கிறது. இன்னும் இணைய இருக்கிறது. அதனால், இதை நான் சவாலாக கருதவில்லை. இதை கொள்கை கூட்டணியாக நாங்கள் கொண்டு செல்கிறோம்.

பிரதமர் மதுரையில் பேசும்போது திமுக மீண்டும் ஆட்சி அமைப்பது ஒரு கானல் நீராக இருக்கும் என்று சொல்லியிருந்தார்?

மோடியைப் பொறுத்தவரை சொல்லவேண்டுமென்றால், ஏற்கனவே தமிழ்நாட்டில் பா.ஜ. ஆட்சி அமைக்க வேண்டும் என்றுதான் கனவு கண்டுகொண்டிருக்கிறார்கள். அதுதான் கானல் நீராக சென்றுகொண்டே இருக்கிறதே தவிர, அவர் சொல்வது போன்று இல்லை

# திருவள்ளூர் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் 633 மனுக்களை பெற்றுக் கொண்டு ரூ.31.21 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் : மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் வழங்கினார்



திருவள்ளூர் மார்ச் 04 : திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தலைமை தாங்கினார்.

கூட்டத்தில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த பொதுமக்கள், தங்களது குறைகளை நிவர்த்தி செய்வது தொடர்பாகவும் பொது பிரச்சனைகள் தொடர்பாக உதவிகள் வேண்டியும் 633 மனுக்களை மாவட்ட ஆட்சியரிடம் வழங்கினர். இதில், நிலம் சம்பந்தமாக 181 மனுக்களும், கலைஞர் மகளிர் உரிமை தொகை சம்பந்தமாக 76 மனுக்களும், சமூக பாதுகாப்பு திட்டம் தொடர்பாக 109 மனுக்களும், வேலைவாய்ப்பு வேண்டி 32 மனுக்களும், பசுமை வீடு மற்றும் அடிப்படை வசதிகள் வேண்டி 25 மனுக்களும் மற்றும் இதர துறைகள் சார்பாக 210 மனுக்கள் என ஆகமொத்தம் 633 மனுக்கள் பெறப்பட்டது. இம்மனுக்களின் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு தகுதியுள்ள பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் அறிவுறுத்தினார்.

இதனைத்தொடர்ந்து, மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்புகுறைதீர்க்கும்கூட்டரங்கில் மாற்றுத் திறனாளிகளிடம் இருந்து மனுக்களை பெற்றுக்கொண்டு, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை வாயிலாக மாவட்ட ஆட்சியர் ஒரு கால் அல்லது இரு கால்கள் பாதிக்கப்பட்ட மற்றும் தசைச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட 15 மாற்றுத்திறனாளிகளுக்கு பேட்டரியால் இயங்கும் சக்கர நாற்காலி ஒன்றின் மதிப்பு ரூ.1,05,000/ என மொத்தம் ரூ.15,75,000 அனைத்து வகை மாற்றுத்திறனாளிகளுக்கான திருமண உதவித்திட்டத்தின் கீழ் 4 பட்டதாரிக்கு ரூ.2,00,000 மற்றும் 3 பட்டதாரி அல்லாதவர்களுக்கு ரூ.75,000 மொத்த திருமண உதவித் தொகையின் மொத்தம் ரூ.2,75,000 வங்கிகளில் வரவு மற்றும் மற்றும் 7 நபர்களுக்கு தலா 1 சவரன் வீதம் 7 சவரன் தங்க நாணயம் மொத்தம் ரூ.9,56,704 மதிப்பிலும் மற்றும் தனியார் வாகன எரிபொருள் நிறுவனத்தின் சார்பில் பெருநிறுவன சமூக பங்களிப்பு நிதி சார்பில் 1 முதுகு தண்டுவடத்தால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளி மற்றும் 2 கால்கள் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் என 3 மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கும் ழிணிளி நிளிலிஜி வாகனம் ஒன்றின் மதிப்பு ரூ.1,04,900 என மொத்தம் ரூ.3,14,700 மதிப்பில் ஆக மொத்தம் ரூ.31,21,404 மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் வழங்கினார்.

இதில் உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ச.சுரேஷ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) வெங்கட்ராமன், தனித்துணை ஆட்சியர் பாலமுருகன், உதவி ஆணையர் (கலால்) கணேசன், மாவட்ட வழங்கல் அலுவலர் வெங்கடேசன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் உஷா ராணி, மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் குமார், துணை ஆட்சியர் (பயிற்சி) செ.சண்முக பிரீத்தா, மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் தொழிலாளர் நலத்துறை சார்பாக இரு நபர்களுக்கு தொழிலாளர் நல வாரிய உறுப்பினர் அடையாள அட்டைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ்குமார் வழங்கினார். உடன் வருவாய் கோட்டாட்சியர் ஷாஜகான், மாவட்ட வழங்கல் அலுவலர் கீதாராணி, தொழிலாளர் நலத்துறை உதவி ஆணையர் மாதேஷ்வரன் ஆகியோர் உள்ளனர்.

# மொடக்குறிச்சி தொகுதியில் போட்டியிட விருப்ப மனு தாக்கல்



வருகின்ற 2026ல் நடைபெற இருக்கும் சட்டமன்ற பொது தேர்தலில், ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதியில் திமுக சார்பில் போட்டியிட, மொடக்குறிச்சி மேற்கு ஒன்றிய செயலாளர் சு. குணசேகரன் திமுக தலைமையிடம் தனது விருப்ப மனுவை கொடுத்துள்ளார்.

# ஊத்தங்கரையில் மாற்றுக் கட்சியிலிருந்து விலகி கழகத் துணைப் பொதுச் செயலாளர் K.P.முனுசாமி_BABL_விலிகி முன்னிலையில் அதிமுகவில் இணைந்தனர்



கிருஷ்ணகிரி, மார்ச்.4

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை சட்டமன்ற தொகுதி, ஊத்தங்கரை நகரம், தெற்கு ஒன்றியம் மற்றும் மத்திய ஒன்றியம் சார்பில் அதிமுக உறுப்பினர் சேர்க்கை நிகழ்ச்சி உற்சாகமாக நடை பெற்றது. ஆடிட்டர்_லோகநாதன் சேகர் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், பல்வேறு மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்டோர் தங்களை அதிகாரப்பூர்வமாக அதிமுகவில் இணைத்துக் கொண்டனர்.

காவேரிப் பட்டினத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் அதிமுக துணை பொதுச் செயலாளரும், வேப்பனப் பள்ளி சட்டமன்ற உறுப்பினருமான கேபி_முனுசாமி அவர்கள் முன்னிலையில் இணைப்பு நடை பெற்றது. புதிய உறுப்பினர்களுக்கு கட்சிக் கொடியை வழங்கி வரவேற்ற அவர், கட்சியின் கொள்கைகள், முன்னாள் தலைவர்களின் வழிகாட்டுதல் மற்றும் பொதுமக்கள் நலத்திற்காக மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்து விளக்கமாகப் பேசினார். வரவிருக்கும் அரசியல் பணிகளில் அனைவரும் ஒருமித்த முயற்சியுடன் செயல்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

## தமிழ்நாடு மீனவர் நல வாரிய உதவி திட்டங்களை எளிய முறையில் பெற புதிய வசதி

கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை: இறப்பு நிவாரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகை, விபத்தினால் ஏற்படும் உடல் உறுப்பு இழப்பிற்கான நிவாரணம், மீன்பிடிக்கையில் காணாமல் போன மீனவருக்கான நிவாரணம், உறுப்பினரின் மகன் மற்றும் மகள் கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை உள்ளிட்ட தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள், பல அலுவலகங்களுக்கு நேரில் சென்று விண்ணப்பிக்க வேண்டிய அவசியமின்றி, முழுமையாக இணையதளம் வாயிலாக அனைத்து நலத்திட்டங்களுக்கும் எளிமையாக விண்ணப்பிக்கலாம். ஆதார் அடிப்படையிலான இகேஒய்சி மூலம் தனிநபர் அடையாளம் சரிபார்க்கப்பட்டு குறைந்த ஆவணங்களுடன் அனைத்து நலத்திட்டங்களுக்கும் விண்ணப்பிக்கலாம்.

# கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு மாபெரும் உண்ணாவிரதப் போராட்டம்



தமிழ்நாடு கிராம ஊராட்சியில் பணிபுரியும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர்கள் மற்றும் தூய்மை பணியாளர் தூய்மை காவலர் சங்கத்தின் மாநில கூட்டமைப்பு தலைவர் எம் செல்வம் தலைமையில் நேற்று 3.3.2026 செவ்வாய்க்கிழமை காலை 10 மணியலவில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள இரண்டாயிரத்துக்கு பின் பணி அமர்த்தபட்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர்கள் ஊதியம் சம்பந்தமாகவும் டி என் ஆர் டி வெப்சைட்டில் பதிவு செய்வதற்காகவும் கூட்டமைப்பு தலைவர் எம் செல்வம் அவருடைய உத்தரவின் பேரில் மாபெரும் உண்ணாவிரதப் போராட்டம் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்றது.

# செஞ்சி ஒன்றியம் மாத்தூர்திருக்கை ஊராட்சியில் நடைபெற்ற அரசு விழாவில் 1.50 கோடி மதிப்பீட்டில் கட்டிமுடிக்கப்பட்ட பல்வேறு பணிகளை முன்னாள் அமைச்சர்செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தார்



விழுப்புரம், மார்ச்.4–

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் மாத்தூர்திருக்கை ஊராட்சியில் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ் 9 லட்சம் மதிப்பீட்டில் புதிய நாடக மேடை கட்டிடம்கட்டப்பட்டு அதன் திறப்பு விழா நிகழ்ச்சி மற்றும் செஞ்சி ஒன்றியம் செம்மேடு, தென்புதுப்பட்டு, வேலந்தாங்கல், போத்து வாய், தச்சம்பட்டு, தேவதானம் பேட்டை, கணக்கன்குப்பம், திருவதிகுன்னம், அப்பம்பட்டு, நரசிங்கராயன்பேட்டை ஆகிய ஊராட்சிகளில்செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி திட்டம்,மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம், ஆரணி பாராளுமன்ற தொகுதி மேம்பாட்டு நிதி திட்டம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டத்தின் கீழ் 1 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்

கட்டப்பட்ட புதிய,அங்கன் வாடி மைய கட்டிடங்கள், நியாய விலை கடை, நாடக மேடை, உள்ளிட்டபல்வேறு கட்டிடங்கள் கட்டப்பட்டு அதன் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.

ஊராட்சி மன்ற தலைவர்கள் மேல்பாப்பாம்பாடி சக்தி, போத்துவாய் ரங்கநாயகி, தென்புதுப்பட்டு சிவக்குமார், செம்மேடு நீலாவதி, ஆகியோர் முன்னிலை வகித்தார்.

மாத்தூர் திருக்கைஊராட்சி மன்ற தலைவர் தேவ கடாட்சம் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில்முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ கலந்துகொண்டு மத்தூர் திருக்கை உள்ளிட்ட 12 ஊராட்சிகளில் 1 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட அங்கன்வாடி மையக் கட்டிடம், நியாய விலை கட்டிடம், நாடக மேடை உள்ளிட்ட பல்வேறு பணிகளை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார்.

அப்போது நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல் பேசுகையில்:

ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் தினம் தினம் பல்வேறு திட்டங்களை அறிவித்து முதலமைச்சர் செயல்படுத்தி வருகிறார் .அந்த வகையில் கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தில் ரூபாய் 5000 வழங்கிய முதலமைச்சர் மீண்டும் திராவிட மாடல் ஆட்சி அமைந்த உடன் மாதம் 2000 ரூபாய் நிச்சயம் முதலமைச்சர் வழங்குவார் என தெரிவித்த முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ மக்களுக்காக உழைத்துக் கொண்டிருக்கும் முதலமைச்சருக்கு என்றென்றும் நீங்கள் உறுதுணையாகவும் ஆதரவாகவும் இருக்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

நிகழ்ச்சியில் செஞ்சி மத்திய ஒன்றிய செயலாளர் விஜயராகவன்,மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, ஒன்றிய கவுன்சிலர் மணி,ஒன்றிய அவைத்தலைவர் வாசு,மாவட்ட பிரதிநிதி அய்யாதுரை, துணை செயலாளர் செல்வமணி, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பிரசன்னா, மாவட்ட சிறுபான்மையினர் பிரிவு அணி துணை அமைப்பாளர் மாத்தூர் தாஸ், ஊராட்சி நிர்வாகிகள் சக்திவேல், பழனி, ராஜாராம், கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்ட நிர்வாகிகள்கலந்துகொண்டனர்.

# கிருஷ்ணகிரி கந்திகுப்பம் கால பைரவர் கோயிலில் பௌர்ணமி வேள்வி யாக பூஜை



கிருஷ்ணகிரி மாவட்டம் கந்திகுப்பம் காலபைரவர் ஆலயத்தில் பௌர்ணமி வேள்வியாக பூஜை நடைபெற்றது திருமுறை சிவன் மந்திரம் சிவாச்சாரியார்கள் ஓதி சிறப்பு பூஜைகள் நடைபெற்றது பூஜையில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர் சுவாமிக்கு சிறப்பு அபிஷேகம் ஆராதனைகள் நடைபெற்றது பக்தர்களுக்கு சுவாமி பிரசாதம் அன்னதானம் வழங்கப்பட்டு பௌர்ணமி வேள்வியாக பூஜை நடைபெற்றது.

# குப்பை கழிவுகளால் சுகாதார சீர்கேடு



கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி தாலுக்கா காட்டக்காரம் ஊராட்சி சந்தூர் கிராமத்தில் சுடுகாட்டில் குப்பைகள் டன் கணக்கில் கொட்டப்பட்டுள்ளது மகம் குப்பை மக்காத குப்பை இரண்டாம் ஒன்றாக கலந்து கொட்டப்பட்டுள்ளது குப்பைகள் அழுகி துர்நாற்றம் வீசி சுகாதார சீர்கேடு அடைந்துள்ளது தண்ணீர் தேங்கி நிற்கும் பள்ளத்தில் குப்பைகள் சேர்ந்துள்ளதால் தண்ணீருடன் குப்பை சேர்ந்து குப்பைகள் அழுகி சுகாதார சீர்கேடு அடைந்துள்ளது அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி காம்பவுண்ட் அருகே இந்த குப்பைகள் கொட்டப்பட்டுள்ளதால் பள்ளிக்கு அருகாமையில் கொட்டப்பட்ட குப்பையால் பள்ளியில் துர்நாற்றம் வீசுவதாக குற்றம் சாட்டு வைக்கின்றன மாணவிகள் பொதுமக்கள் இந்தப் பகுதியில் இந்தப் பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் மாசடையும் அபாய நிலை உள்ளது விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றன பர்கூர் வட்டார வளர்ச்சி அலுவலர் ஆய்வு செய்து குப்பைகளை அகற்றி கொடுக்க குப்பைகளை மறுசுழச்சி செய்ய தனித்தனியாக மகம் குப்பை மக்காத குப்பை பிரிக்க சமூக ஆர்வலர்கள் பொதுமக்கள் விவசாயிகள் கோரிக்கை வைக்கின்றனர்.

# பணி ஓய்வு பெற்றார்







ஈரோடு கால்நடை பராமரிப்புத் துறையில் 38 ஆண்டுகள் பணியாற்றி வந்த விஜயகுமார் பணி ஓய்வு பெற்றார். ஈரோடு மண்டல இணை இயக்குனர் பாஸ்கர் மற்றும் உடன் பணிபுரிந்தவர்களுக்கு நன்றி தெரிவித்து வாழ்த்து பெற்றார்.

# தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் சார்பில் பக்தர்களுக்கு அன்னதானம்



ஓசூர் மாநகரில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற அருள்மிகு ஸ்ரீ மரகதாம்பாள் உடனுறை சந்திரசூடேஸ்வரர் சுவாமி திருக்கோவில் தேர் திருவிழா முன்னிட்டு திருவிழாவிற்கு வருகைத் தரும் பக்தர்களுக்கு தமிழக வாழ்வுரிமை கட்சி யின் ஓசூர் தொகுதி பொறுப்பாளர்கள் என் டி ஆர் மஞ்சு, சங்கர், ராஜா...அவர்களின் சார்பில் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டு இந்த அன்னதான நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி ஒருங்கிணைந்த மாவட்டம் மண்டல செயலாளர் மாவீரன் நெப்போலியன் அவர்கள் கலந்துகொண்டு பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கி தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாநில நிர்வாகி ரமேஷ் ராஜா மற்றும் தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தொண்டர்கள் இந்த அன்னதான நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம், கோடுவெளி கிராமத்தில் செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பாக நடைபெற்ற தமிழக அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் விளக்க புகைப்பட கண்காட்சிகளை பொதுமக்கள் திரளாக பார்வையிட்டனர்.

# உலக அமைதி வேண்டியும், சர்வதேச சட்ட மீறல்களைக் கண்டித்தும் புதுச்சேரியில் AIMIM சார்பில் மெழுகுவர்த்தி ஏந்தி கண்டன ஆர்ப்பாட்டம்!





புதுச்சேரி, மார்ச். 4

உலகெங்கும் அமைதி நிலவ வேண்டியும், சர்வதேச சட்டங்களை மீறி செயல்படும் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நாடுகளின் போக்கைக் கண்டித்தும், அகில இந்திய மஜ்லிஸ்இ இத்தேஹாதுல் முஸ்லிமீன் (AIMIM) கட்சியின் புதுச்சேரி மாநிலக் கிளை சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாநிலத் தலைவர் ஜெ. சம்சுதீன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், ஏராளமானோர் மெழுகுவர்த்தி ஏந்தித் தங்கள் எதிர்ப்பைப் பதிவு செய்தனர்.

ஆர்ப்பாட்டத்தின் போது முன்வைக்கப் பட்ட முக்கிய அம்சங்கள்

ஐநா சாசனத்தின் விதி 2(4)ன்படி, ஒரு நாட்டின் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து தலைவர்களையும் பொதுமக்களையும் படுகொலை செய்வது சர்வதேச சட்டத்திற்கு எதிரானது. இது உலக அமைதிக்கே அச்சுறுத்தலாகும்.

ஜெனிவா உடன்படிக்கையின்படி போர்க் காலங்களில் பொது மக்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அதை மீறி நடத்தப்படும் தாக்குதல்கள் 'போர்க்குற்றங்களாக' (War Crimes) கருதப்பட வேண்டும்.

பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்காமல், ஆக்கிரமிப்பு செய்யும் நாடுகளுக்குச் சிவப்புக் கம்பளம் விரிக்கும் போக்கை இந்தியப் பிரதமர் மாற்றிக்கொள்ள வேண்டும். பாதிக்கப் பட்ட மக்களின் பக்கம் நின்று குரல் எழுப்ப வேண்டும் என வலியுறுத் தப்பட்டது.

சில நாடுகளுக்கு மட்டும் விலக்கு அளிக்கும் இரட்டை நிலையை ஐநா கைவிட வேண்டும். அனைத்து நாடுகளும் ஐநா சட்டங் களுக்குக் கட்டுப்பட வேண்டும்.

இந்த எழுச்சிமிகு கண்டன ஆர்ப்பாட்டத் திற்கான அனைத்து விரிவான ஏற்பாடு களையும் புதுச்சேரி மாநில செயலாளர் வழக்கறிஞர் சாகுல் அமித் அவர்கள் செய்திருந்தார்.

இந்நிகழ்வில் AIMIM மாநிலத் தலைவர் ஜெ. சம்சுதீன் அவர்களுடன் பல்வேறு அமைப்புகளின் தலைவர்களும் நிர்வாகிகளும் கலந்துகொண்டு ஆதரவு தெரிவித்தனர்:

லோகு அய்யப்பன் தலைவர், திராவிட விடுதலைக் கழகம்.

கோ. ஜெகநாதன் தலைவர், மக்கள் வாழ்வுரிமை இயக்கம்.

இரா. மங்கையர் செல்வன் தலைவர், தமிழ் நிலவர் விடுதலை வேங்கைகள்.

கோ. அபூகர் தலைவர், தமிழ்க்களம்.

சீ.சு. சுவாமிநாதன் தலைவர், தேசிய மக்கள் முன்னணி.

அ. பஷீர் அகமது தலைவர், B.BOLD.

அ.செ. தீனா தலைவர், பெரியார் சிந்தனையாளர்கள் இயக்கம்.

பி. பிரகாஷ் தலைவர், தலித் மக்கள் பாதுகாப்பு இயக்கம்.

ம. இளங்கோ செயலாளர், தந்தை பெரியார் திராவிடர் கழகம்.

மேலும், கிமிவிமிவி கட்சியின் தேர்தல் ஒருங்கிணைப்பாளர் ஏ.ஆர். மஜித் இன்டர்நேஷனல், மாநிலச் செயலாளர் முஹம்மது அஹமது, மாவட்டத் தலைவர் விசீ. பலுலுல்லா, மாவட்டச் செயலாளர் பாபு முகமது அலி மற்றும் பலர் முன்னிலை வகித்தனர்.

"அமைதி நமது அடிப்படை உரிமை" என்பதை வலியுறுத்தி, உலக ஒற்றுமை மற்றும் மனிதகுல நலன் காக்கப்பட வேண்டும் என்ற முழக்கத்துடன் இந்த ஆர்ப்பாட்டம் நிறைவுற்றது.

## தேர்தலில் போட்டியிடவில்லை: நாம் தமிழர் கட்சியின் புதுச்சேரி பாசறை செயலாளர் நடிகர் பாண்டி செல்வம் திடீர் அறிவிப்பு!

புதுச்சேரி நாம் தமிழர் கட்சியின் புதுச்சேரி கலை இலக்கியப் பாசறை செயலாளரும், பிரபல நடிகருமான பாண்டி செல்வம், வரவிருக்கும் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடப் போவதில்லை என்ற தனது அதிரடி முடிவை அறிவித்துள்ளார். இது அரசியல் மற்றும் கட்சி வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



தான் தேர்தலில் போட்டியிடாததற்கு தனது திரை உலக ஆசான் வழங்கிய ஆலோசனையே முக்கியக் காரணம் என்று அவர் தெரிவித்துள்ளார். ஆசானின் வழிகாட்டுதலின்படி, தற்போது இந்த முடிவை எடுத்துள்ளதாக அவர் விளக்கம் அளித்துள்ளார்.

தேர்தலில் போட்டியிடவில்லை என்றாலும், நாம் தமிழர் கட்சியிலிருந்து தான் விலகவில்லை என்பதையும், கட்சியின் ஒரு அங்கமாகவே தொடர்ந்து செயல்படுவேன் என்பதையும் அவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

கட்சித் தலைமை யாரை வேட்பாளராக நிறுத்தினாலும், அவர்களுக்குத் தனது முழு ஆதரவை வழங்கி, தேர்தல் களத்தில் அவர்களுக்காக வலு சேர்ப்பேன் என்று கூறியுள்ளார்.

ஒருவேளை கட்சித் தலைவர் சீமான் தன்னை வேட்பாளராகப் போட்டியிடுமாறு நிர்பந்தித்தால், தலைமைக்குக் கட்டுப்பட்டு அந்த கட்டளையை ஏற்றுப் போட்டியிடத் தயாராக இருப்பதாகவும் அவர் நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டுள்ளார்.

## பஸ் மோதி விபத்து; பிளஸ் 2 தேர்வெழுத சென்ற மாணவி மரணம்

மதுரை: மார்ச்.4–

விருதுநகர் மாவட்டம் காரியாபட்டி அருகே ஆவியூரை சேர்ந்தவர் முத்துகிருஷ்ணன். கொத்தனார். இவரது மகள் துர்காதேவி (17) மதுரை தெப்பகுளம் பகுதியில் உள்ள தனியார் பள்ளியில் பிளஸ் 2 படித்து வந்தார். விடுதியில் தங்கி படித்து வந்தவர், தேர்வு விடுமுறைக்காக வீட்டிற்கு சென்றிருந்தார். தேர்வு எழுதுவதற்காக உறவினர் அஜித்குமாருடன், ஆவியூரில் இருந்து டூவீலரில் மதுரைக்கு நேற்று காலை வந்து கொண்டிருந்தார்.

வலையங்குளம் பகுதியில் வந்தபோது, அல்லிகுளம் பகுதியில் இருந்து பெரியார் பஸ் நிலையம் நோக்கி சென்ற அரசு டவுன்பஸ், டூவீலர் மீது மோதியது. இதில், தூக்கி வீசப்பட்டதில் மாணவி துர்காதேவி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். பெருங்குடி போலீசார், படுகாயமடைந்த அஜித்குமாரை மீட்டு மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். பிளஸ் 2 தேர்வெழுதச் சென்ற மாணவி, பஸ் மோதி உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



புதுச்சேரி அரசு இந்திரா காந்தி பொது மருத்துவமனையில்நேற்று காலை 9 மணி முதல் 10 மணி வரை ஹவுஸ்கீப்பிங் ஊழியர்களின் குறைந்தபட்ச சம்பளத்தை உயர்த்தி தர வேண்டிய மத்திய அமைச்சர் மன்சூர் மண்டேசீவியா அவர்கள் கடந்த அக்டோபர் 1 2024 ஆம் ஆண்டு அறிவித்த அறிவிப்பின் அடிப்படையில் ஹவுஸ்கீப்பிங் ஊழியர்களுக்கு குறைந்தபட்ச சம்பளமாக மாதம் ஒன்றுக்கு ரூபாய் 21,000 கொடுக்கப்பட வேண்டும் என்கின்ற அறிவிப்பை உடனடியாக புதுவை அரசு தொழிலாளர் துறையும் குறைந்தபட்ச மத்திய அமைச்சருடைய அறிவிப்பினை அமல் செய்ய வேண்டி இன்றைய தினம் ஒரு மணி நேர அடையாள வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது இந்த போராட்டத்திற்கு புதுச்சேரி பாட்டாளி தொழிற்சங்கத்தின் பேரவை தலைவர் ஜெயபாலன் அவர்கள் தலைமை வகித்தார் பாட்டாளி தொழிற்சங்க நிர்வாகிகள் திருமலை பாண்டித்துரை இளவரசன் மற்றும் மகளிர் அணி தலைவி எபேல் வெர்ஜினா அவர்களும் கலந்து கொண்டனர் மேலும் புதுச்சேரி மகளிர் மட்டும் குழந்தைகள் மருத்துவமனுடைய தலைவர் தணிகாசலம் செயலாளர் வேல்முருகநாதன் பொருளாளர் அருணா மற்றும் முனுசாமி தனம் தனலட்சுமி சித்ரா ஊழியர்கள் கலந்து கொண்டனர்

## திண்டுக்கல் அருகே 2 நாட்களுக்கு முன்பு மாயமான இளம்பெண் கிணற்றில் சடலமாக மீட்பு

திண்டுக்கல், மார்ச். 4

திண்டுக்கல் அருகே உள்ள அகரம் பேரூராட்சி பெரிய மல்லணம்பட்டியைச் சேர்ந்தவர் பெத்தன். கூலித் தொழிலாளி. இவரது மகள் காமாட்சியம்மாள் (வயது 17). இவர் திண்டுக்கல்லில் உள்ள பழக்கடையில் வேலை பார்த்து வந்தார்.

கடந்த சில தினங்களுக்கு முன்பு பெத்தன் வீட்டில் அவரது அனுமதியின்றி கட்சி கொடி கம்பங்கள் ஊன்றப்பட்டது. இதனை பெத்தனின் ''மகன் கண்டித்தார். இதனால் கடும் வாக்குவாதம் ஏற்பட்ட நிலையில் போலீஸ் நிலையத்திலும் புகார் அளிக்கப்பட்டது.



போலீசார் வழக்கு பதிவு செய்து கொடிகம்பம் ஊன்றிய பெண்ணை கைது செய்தனர். இந்த சம்பவத்தால் இரு தரப்பினருக்கும் இடையே அவ்வப்போது வாக்குவாதம் ஏற்பட்டு வந்துள்ளது.

கடந்த 2 நாட்களுக்கு முன்பு வீட்டை விட்டு வெளியே சென்ற காமாட்சியம்மாள் மாயமானார். பல இடங்களில் தேடியும் கிடைக்கவில்லை. இந்நிலையில் இன்று காலை அதே பகுதியில் உள்ள ஒரு கிணற்றில் அவர் சடலமாக மிதந்தார். இது குறித்து தாடிக்கொம்பு போலீசாருக்கும் தீயணைப்பு துறையினருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது.

தீயணைப்பு துறையினர் அங்கு விரைந்து வந்து கிணற்றில் மிதந்த காமாட்சியம்மாளின் உடலை மீட்டனர். அவர் முகம் சிதைந்து காணப்பட்டது. இதனையடுத்து போலீசார் பிரேத பரிசோதனைக்காக அவரது உடலை திண்டுக்கல் அரசு மருத்துவக்கல்லூரி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் இது குறித்து தாடிக்கொம்பு போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். மாயமான இளம்பெண் மர்மமான முறையில் கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டது அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# அதிமுக சார்பில் கொடியேற்றி நலத்திட்ட உதவிகள் மற்றும் அன்னதானம் வழங்கும் விழா!!



கோவை: மார்ச்04

கோவை காந்திபுரம் கிராஸ்கட் 5வது வீதியில் புரட்சித்தலைவி அம்மாவின் பிறந்த நாளை முன்னிட்டு கோவை மாநகர் மாவட்ட அண்ணா ஆட்டோ ஓட்டுநர் தொழிலாளர் நலச்சங்கம் சார்பில் புரட்சித்தலைவி அம்மாவின் பிறந்தநாளை முன்னிட்டு கோவை மாநகர் மாவட்ட செயலாளர் அண்ணா தொழிற்சங்க பேரவை அசோக்குமார் முன்னிலையில் கோவை மாநகர் மாவட்ட கழக செயலாளர் அம்மன் ளீ அர்ஜுனன், கழக எம்ஜிஆர் இளைஞரணி செயலாளர் கே .ஆர். ஜெயராம், ஆகியோர் கொடியேற்றி நலத்திட்ட உதவிகள் மற்றும் அன்னதானம் வழங்கும் விழாவை தொடங்கி வைத்தனர். உடன் ஆட்டோ சங்கத் தலைவர் எம்.ராஜன், ஆட்டோ சங்க செயலாளர் இஸ்மாயில், மணிகண்டன் மற்றும் ஆட்டோ ஓட்டுநர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# சேலம் மாவட்டம் சாதனை அஞ்சலக சிறுசேமிப்புத் திட்டம் மூலம் 5 ஆண்டுகளில் ரூ.11,598.34 கோடி வசூல்.



சேலம்: மார்ச். 4–

அஞ்சலக சிறுசேமிப்புத் திட்டங்கள் மூலம் சேலம் மாவட்டம் கடந்த 5 ஆண்டுகளில் ரூ.11,598.34 கோடி வசூல் செய்து சாதனை படைத்துள்ளதாக மாவட்ட ஆட்சியர் ரா. பிருந்தாதேவி கூறினார்.

சேலம் மாவட்டத்தில் அஞ்சலக சிறுசேமிப்புத் திட்டங்களில் வசூல் செய்து சாதனை புரிந்த அஞ்சலக சிறுசேமிப்பு முகவர்களுக்கு பரிசளிப்பு விழா மாவட்ட ஆட்சியர் ரா. பிருந்தாதேவி தலைமையில் திங்கள் கிழமை ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதுதொடர்பாக ஆட்சியர் தெரிவித்துள்ளதாவது:

சேலம் மாவட்டத்தில் கடந்த 202122 ஆம் நிதியாண்டுக்கான அஞ்சலக சிறுசேமிப்புத் திட்டங்களில் ரூ.1,402.7 கோடி, 202223 ஆம் நிதியாண்டு ரூ. 1,784.99 கோடி, 20232024 ஆம் நிதியாண்டில் ரூ. 2,600.19 கோடி, 202425 ஆம் நிதியாண்டில் ரூ. 3,083.25 கோடி, நடப்பு 20252026 ஆம் நிதியாண்டில் ஜனவரி வரை ரூ. 2,727.21 கோடி என கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் ரூ. 11,598.34 கோடியை சேலம் மாவட்டம் வசூலித்து சாதனை படைத்துள்ளது.

2024 2025 ஆம் நிதியாண்டில் வசூலில் சாதனை புரிந்த அஞ்சலக சிறுசேமிப்பு முகவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. குறிப்பாக, கே.வேலுமணி என்ற சிறுசேமிப்பு முகவர் அஞ்சலக சிறுசேமிப்புத் திட்டங்களில் ரூ. 75.89 கோடி வசூல் செய்து, தொடர்ந்து 6 ஆண்டுகளாக மாநில அளவில் முதலிடம் பெற்றுள்ளார். கருப்பூரைச் சேர்ந்த எஸ்.கோவிந்தசாமி ரூ. 27.73 கோடி வசூல் சாதனை செய்து 5 ஆண்டுகளாக மாவட்ட அளவில் முதலிடம் பெற்றுள்ளார்.

மேலும், சிறுசேமிப்புத் திட்டங்களில் அதிக வசூல் செய்த அனைத்து சிறுசேமிப்பு முகவர்களுக்கும் பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளன என்றார். முன்னதாக, சிறுசேமிப்பு முகவர் பணிதவிர, சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வண்ணம் தனது சொந்த செலவில் 11,000 நிழல் தரும் மரக்கன்றுகள் மற்றும் பூச்செடிகளை நட்டுப் பராமரித்து வரும் ஆத்தூர் தலைமை அஞ்சலக முகவர் டி. சிவகுமாரின் தன்னார்வ சேவையை ஊக்குவிக்கும் வகையில் கேடயம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப் பட்டது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சிறு சேமிப்பு) எம். முரளிதரன் மற்றும் அலுவலர்கள், சிறுசேமிப்பு முகவர்கள் கலந்துகொண்டனர்.

# "ஆரோக்கியமான உடல் அமைதியான மனம்" விழிப்புணர்வு நிகழ்ச்சி



திருச்சி. மார்ச் 4

திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரி, சமூகப்பணி முதுகலை மற்றும் ஆய்வு துறையின் முதல் ஆண்டு மாணவி செல்வி. கிருபா லக்ஷ்மி. த, உதவி பேராசிரியர் V. பியூலா நேச பிரியா வழிகாட்டுதலின் கீழ், ட்ரீம் இந்தியா நெட்வொர்க் நிறுவனத்தில் "ஆரோக்கியமான உடல் அமைதியான மனம்" என்ற தலைப்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தினார்.

இந்நிகழ்ச்சிக்கு இல்ல ஒருங்கிணைப்பாளர்சகோதரி நிஜோ ஷாலினி தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட விஜய் கிருஷ்ணன், MSW,M.Phil, PGDC, MBA, (PhD), அவர்கள் உடல்நலம் மற்றும் மனநலத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, சுத்தம், உடற்பயிற்சி, தியானம், சுவாச பயிற்சி போன்றவற்றை பின்பற்றுமாறு அறிவுறுத்தினார். மேலும் பலூன் செயல்பாடு, மேஜிக்கல் கிளாப், பட்டாம்பூச்சி அணைப்பு போன்ற பயிற்சிகள் மூலம் மனஅழுத்தம் குறைக்கும் முறைகளை கற்றுக்கொடுத்தார்.

இந்நிகழ்ச்சி பயனாளர்களுக்கு நல்ல உடல் மற்றும் மனநல விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

# மனநலக் குறைபாடு கொண்ட நபர்களுக்கான பழைய பயன்படுத்தப்பட்ட ஆடைகள் சேகரிப்பு நிகழ்ச்சி



திருச்சி. மார்ச் 4

திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரி சமூகப் பணித் துறையின் சார்பில், IMSW மாணவர் பயிற்சியாளர் எஸ். பாண்டிதுரை, கல்லூரி வளாகத்தில் "Second Chance Clothing" என்ற தலைப்பில் மனநலக் குறைபாடு கொண்ட நபர்களுக்கான பழைய பயன்படுத்தப்பட்ட ஆடைகள் சேகரிப்பு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தார். இந்த முயற்சியின் ஒரு பகுதியாக, கல்லூரி மாணவர்களிடமிருந்து நன்றாக பயன்படுத்தக்கூடிய பழைய ஆடைகள் சேகரிக்கப்பட்டன. சமூக நல நோக்கத்துடன் மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு தங்களது பயன்படுத்தப் பட்ட ஆடைகளை தாராளமாக வழங்கினர்.

சேகரிக்கப்பட்ட ஆடைகள், மனநலக் குறைபாடு கொண்ட நபர்களின் புனர்வாழ்விற்காக செயல்படும் குணசீலத்தில் அமைந்துள்ள The Banyan நிறுவனத்திற்கு வழங்கப் பட்டன. இந்நிறுவனம் அவசர பராமரிப்பு மற்றும் மீட்பு மையத்தை நடத்தி, மனநலக் குறைபாடு கொண்ட நபர்களுக்கு சிகிச்சை, பராமரிப்பு மற்றும் புனர்வாழ்வு சேவைகளை வழங்கி வருகிறது. இந்நிகழ்ச்சி மையத்தில் தங்கியுள்ள பயனாளர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. சேகரிக்கப்பட்ட ஆடைகள், சமூகப் பணித் துறைத் தலைவர் லெப். டாக்டர் எப். கார்டர் பிரேம்ராஜ் மூலம் அதிகாரப்பூர்வமாக அந்த நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டன.

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு

# வழக்கறிஞர் அணி சார்பில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் செஞ்சிமஸ்தான் எம்.எல்.ஏகலந்துகொண்டு அன்னை தெரேசா ஆதரவற்ற முதியவர்களுக்கு நலத்திட்ட உதவிகளையும்,இளம் வழக்கறிஞர்களுக்குசட்டப் புத்தகம் மற்றும் இனிப்பு வழங்கினார்.



செஞ்சி, மார்ச்.4–

திமுக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர் களின் 73 ஆவதுபிறந்த நாள்விழாவை முன்னிட்டு விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் வழக்கறிஞர் அணி சார்பில் அன்னை தெரேசா ஆதரவற்ற முதியோர் இல்லத்தில் வசிக்கும் மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் இளம் வழக்கறிஞர்களுக்கு பயிற்சி சட்டப் புத்தகம் வழங்கும் நிகழ்ச்சி மற்றும் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கும் நிகழ்ச்சிநடைபெற்றது.

அரசு வழக்கறிஞர் கிருஷ்ணன் தலைமை தாங்கினார்.

செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் , மாநில பொதுக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் மணிவண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சிமஸ்தான்எம் எல் ஏ கலந்து கொண்டு ஆதரவற்ற முதியோர் இல்லத்திற்கு நலத்திட்ட உதவிகளையும் ,இளம் வழக்கறிஞர்களுக்கு பயிற்சி சட்ட புத்தகத்தை வழங்கி பொது மக்களுக்கு இனிப்பு வழங்கினார்.

நிகழ்ச்சியில்மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பார் அசோசியேசன் சங்கத் தலைவர் பிரவீன், சங்க செயலாளர் அசாருதீன்,

அரசு வழக்கறிஞர் தமிழ் செல்விகர்ணன், ,மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் சுதாகரன் ,மூத்த வழக்கறிஞர்கள் அரிகிருஷ்ணன், மழைமேனி பாண்டியன், முருகன் மணிகண்டன், வீரப்பாண்டியன் ,ஜெயக்குமார், நந்தினி, பத்மா,கலை, உத்தரவேலு, ராஜா, ர.,அரவிந்தராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



நடைபெற இருக்கின்ற 2026 தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தலில், திமுக சார்பில் ஈரோடு கிழக்கு தொகுதியில் போட்டியிட விருப்பம் தெரிவித்து, ஈரோடு தெற்கு மாவட்ட திமுக இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ. திருவாசகம் திமுக தலைமையிடம் தனது விருப்ப மனுவை தாக்கல் செய்தார். இந்தத் தொகுதியில் சீட் பெறுவதில் திமுகவினர் இடையே கடும் போட்டி நிலவுவதாக தெரிகிறது.

# இயற்கை உயிராற்றல் (பயோடைனமிக்) வேளாண்மை பயிற்சி நிறைவு விழா




மணப்பாறை மார்ச் 4

அகிம்சா தொண்டு நிறுவனம், இன்ப சேவா சங்கம் கடவூர், இயற்கை உயிராற்றல் வேளாண் பள்ளி, மற்றும் இந்திய இயற்கை உயிராற்றல் வேளாண்மை கூட்டமைப்பு ( BDAI) இணைந்து இயற்கை உயிராற்றல் (பயோடைனமிக்)வேளாண்மை பயிற்சி மூன்று நாட்கள் நடத்தப் பட்டது,

இப்பயிற்சி கூட்டம், இயற்கை உயிராற்றல் முறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இந்திய இயற்கை உயிராற்றல் வேளாண்மை கூட்டமைப்பு ஜெய்சன் ஜெரோம், அன்பு, விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர்.

இப்பயிற்சியின் நிறைவு நாளில், நபார்டு வங்கி கரூர் மாவட்ட வளர்ச்சி மேலாளர் பிரபாகரன் கலந்து கொண்டு, ஊக்கமளிக்கும் நிறைவு உரையை வழங்கினார். விவசாயிகள் இயற்கை விவசாயத்தை கற்றுக்கொள்வதுடன் மட்டுமல்லாமல், அதனை நடைமுறையில் செயல்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

மேலும், காந்திகிராம் கிராமிய பல்கலைக்கழகம் முன்னாள் துணை வேந்தர் டாக்டர் மார்கண்டன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, பயிற்சியில் பங்கேற்ற விவசாயிகளுடன் கலந்துரையாடினார்.

இன்ப சேவா சங்கத்தின் செயலாளரும், இந்திய இயற்கை உயிராற்றல் வேளாண்மை கூட்டமைப்பு பொருளாளருமான முனைவர். பெருமாள் அனைவரையும் வரவேற்றார்

பயோடைனமிக் விவசாயத்தின் முக்கியத்துவம் மற்றும் அதன் பயன்கள் குறித்தும் நம் பாரம்பரிய பருத்தி (சுரக்ஷா – கருங்கண்ணி கே12), விவசாய சாகுபடிகளை முன்னிருத்துவதற்கான முயற்சிகளை கரூர் மாவட்டத்தில் மேற்கொள்ள இருப்பது குறித்தும் விளக்கினார்.

அகிம்சா தொண்டு நிறுவன இயக்குநர் விக்டர், நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார்.

அகிம்சா பணியாளர்கள், இன்ப சேவா சங்க நிர்வாகச் செயலாளர் ரேவதி ஆகியோர் நிறைவு விழாவில் கலந்து கொண்டார்கள்.

இந்த பயிற்சி கூட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து இயற்கை விவசாயிகளுக்கும், பயிற்சி நிறைவின் அடையாளமாக சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

பயிற்சி மூலம் பெற்ற அறிவும் அனுபவமும், விவசாயிகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்த உதவும் என பங்கேற்பாளர்கள் தெரிவித்தனர்.

### புதுச்சேரியில் 124வது மாசி மகத் தீர்த்தவாரி விழா:

# அரசியல் கட்சியினர் மற்றும் சமூக அமைப்புகள் சார்பில் உற்சாகமாக நடைபெற்ற அன்னதானம்!

புதுச்சேரி: மார்ச்.4–

புதுச்சேரியின் வரலாற்றுச் சிறப்புமிக்க 124ஆம் ஆண்டு மாசி மக தீர்த்தவாரி விழா இன்று பக்தி பரவசத்துடன் வெகுவிமர்சையாக நடைபெற்றது. விழாவையொட்டி நகரின் பல்வேறு பகுதிகளில் பக்தர்களுக்கு அன்னதானம், நீர்மோர் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன.

தமிழக வெற்றி கழகம் சார்பில் 18வது ஆண்டு நீர்மோர் வழங்கல் லாஸ்பேட்டை பகுதியில், தமிழக வெற்றி கழகத்தின் சார்பில் 18வது ஆண்டாக மாசி மகத் தீர்த்தவாரியை முன்னிட்டு நீர்மோர் வழங்கும் நிகழ்வு மிக விமர்சையாக நடைபெற்றது. முன்னாள் எம்.எல்.ஏ திரு. சாமிநாதன் மற்றும் தொகுதி தலைவர் திரு. சரவணன் ஆகியோர் இந்நிகழ்விற்குத் தலைமை தாங்கினர்.

இதில் கட்சி நிர்வாகிகள் ஆறுமுகம், நட்ராஜ், முருகன், ஆனந்த், வழக்கறிஞர் கார்த்திக், அந்தோணி, அருள் பாண்டி, அன்பரசன், வெங்கடேஷ், நிஷாந்த் ஆகியோர் கலந்துகொண்டனர். மேலும், மகளிர் அணி நிர்வாகிகள் மேரி பிரேமா, வள்ளி, சத்தேஸ்வரி, ரேவதி, புவனேஸ்வரி, ராஜேஸ்வரி மற்றும் கட்சித் தொண்டர்கள் திரளாகப் பங்கேற்று பக்தர்களுக்கு நீர்மோர் வழங்கினர்.

# தேர்தல் பணி ஈரோடு ஆட்சியர் ஆய்வு





ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கத்தில், மாவட்ட ஆட்சியர் ச. கந்தசாமி தலைமையில் நடைபெற இருக்கின்ற 2026 சட்டமன்ற பொது தேர்தலில், அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் தேர்தல் செலவினங்கள் தொடர்பாக விலைப்பட்டியல் நிர்ணயம் செய்வது தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் சு. சாந்தகுமார் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் கூட்டத்தில் பங்கேற்றனர்.

# சந்திர கிரகணத்தை முன்னிட்டு தஞ்சை பெரிய கோவிலில் நடை அடைப்பு",

"தஞ்சாவூர்: மார்ச்.4–

வானில் சூரியன், பூமி, நிலவு ஆகிய 3ம் ஒரே நேர்கோட்டில் வரும்போது பூமியின் நிழல் நிலவின் மீது விழுகிறது. இதுவே சந்திர கிரகணமாகும். இந்தாண்டிற்கான முழு சந்திர கிரகணம் இன்று பிற்பகலில் நிகழ உள்ளது. நேற்று பிற்பகல் 3.20 மணிக்கு தொடங்கி மாலை 6.48 மணிக்கு முடிவடையும். சந்திரனின் முழுமையாக சிவப்பு நிறம் மாலை 4.34 மணி முதல் மாலை 5.33 மணி வரை தோன்றும்.பொதுவாக சூரியகிரகணம், சந்திர கிரகணம் நாட்களில் கோவில்களில் நடை சாத்தப்படுவது வழக்கம். அதன்படி நேற்று தஞ்சை மாவட்டத்தில் அனைத்து கோவில்களும் காலை நேரத்தில் நடை சாத்தப்பட்டன. தஞ்சை பெரிய கோவிலில் காலை நேர பூஜைகள் முடிந்த பின்னர் காலை 9 மணிக்கு நடை சாத்தப்பட்டது. பக்தர்கள் கோவிலில் இருந்து வெளியேறினர். மாலையில் கிரகணம் முடிந்து பரிகார பூஜைகள் செய்த பின்பு இரவு 7.30 மணிக்கு நடை திறக்கப்பட உள்ளது.",

# தொடர் திருட்டால் வடமதுரை மற்றும் அய்யலூர் வேடசந்தூர் பகுதிகளில் பொதுமக்கள் அச்சம்

திண்டுக்கல் மார்ச் 4

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் கொசவபட்டியைச் சேர்ந்தவர் காளியம்மாள் (வயது 65). இவரது மகன்கள் கந்தன், மாரிமுத்து, சுப்பிரமணி. ஆகிய 4 பேரும் வாய் பேச முடியாத மாற்றுத்திறனாளிகள். துணிகளை அயனிங் செய்து கொடுத்து பிழைப்பு நடத்தி வந்தனர். இவரது கடையில் இருந்த 2 இஸ்திரி பெட்டிகளை மர்ம நபர்கள் திருடிச் சென்றனர். டி.எஸ்.பி. அலுவலகம் அருகே நடந்த இந்த திருட்டு பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. அதேபோன்று வடமதுரை அருகே மூக்கடை பிள்ளையார் கோவிலில் அருகில் உள்ள தூங்கிக் கொண்டிருந்த முத்தக்காள் தூங்கிக் கொண்டிருந்த பொழுது காதில் அணிந்திருந்த அரைப் பவுன் தோட்டினை பிடுங்கிச் சென்றதால் சம்பந்தப்பட்ட பெண் அலறாமல் சத்தம் கேட்டு அருகில் இருந்தவர்கள் திருடன் திருடன் என குரல் எழுப்பினர் இதனால் காதில் ரத்தம் சொட்ட சொட்ட மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார் சம்பவம் குறித்து வடமதுரை போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர் இதனால் இரவு நேர ரோந்து பணியினை தீவிர படுத்த வேண்டும் என்று பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்

# அமைச்சர் முத்துசாமி விருப்ப மனு தாக்கல்



வருகின்ற 2026 சட்டமன்ற பொது தேர்தலில், ஈரோடு மேற்கு தொகுதியில் போட்டியிட விருப்பம் தெரிவித்து, அமைச்சர் சு. முத்துசாமி திமுக தலைமையிடம் தனது விருப்ப மனுவை தாக்கல் செய்தார்.

# புதுச்சேரியில் 124வது மாசி மகத் தீர்த்தவாரி விழா: கருவடிக்குப்பம் வாகை அறக்கட்டளை சார்பில் உற்சாகமாக நடைபெற்ற அன்னதானம்!




புதுச்சேரியின் வரலாற்றுச் சிறப்புமிக்க 124ஆம் ஆண்டு மாசி மக தீர்த்தவாரி விழா இன்று பக்தி பரவசத்துடன் வெகுவிமர்சையாக நடைபெற்றது. விழாவையொட்டி நகரின் பல்வேறு பகுதிகளில் பக்தர்களுக்கு அன்னதானம், நீர்மோர் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன. அதில் ஒரு பகுதியாக புதுச்சேரி கருவடிக்குப்பம் வாகை அறக்கட்டளை சார்பாக நடைபெற்ற அன்னதான நிகழ்ச்சிக்கு, அதன் நிறுவனத் தலைவர் ஜெகன் தலைமை தாங்கி உணவுகளை வழங்கினார். உடன் துணைத்தலைவர் ஜெயேந்திரன், செயலாளர் வழக்கறிஞர் கார்த்திக், துணைச் செயலாளர் ஹரி மற்றும் அறக்கட்டளை நிர்வாகிகள், ஊர் பொதுமக்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

# குடிநீர் கேட்டு மனு அளிக்க வந்த கிராமத்தினர்.



திண்டுக்கல் மார்ச் 4

திண்டுக்கல் மாவட்டம் வடமதுரை அருகே உள்ள வேல்வார் கோட்டை ஊராட்சிக்கு உட்பட்ட சாமிநாதபுரம் பகுதியில் பல ஆண்டுகளாக அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்களுக்கு காவிரி குடிநீர் மட்டுமே வழங்கப்பட்டு வந்த நிலையில் தங்களுக்கு அடிப்படை ஆதாரமான கூடி நீர் வசதி மற்றும் போக்குவரத்து வசதி இன்மையால் தங்கள் குழந்தைகள் நீண்ட தூரம் பயணம் செய்து பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு செல்வதாக தெரிவித்தனர் இவ்வளவு ஆண்டு காலமாக தங்களுக்கு தேவையான குடிநீர் மற்றும் பஸ் போக்குவரத்து வசதி இன்மையால் மிகவும் அவதிப்படுவதாகவும் வடமதுரை யூனியன் அலுவலகத்தின் முன்பு புகார் மனுடன் வந்ததால் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது, பின்னர் அங்கு வந்த காணப்பாடி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவரும் திமுக ஒன்றிய செயலாளருமான பாண்டி, விரைந்து நடவடிக்கை எடுத்து வேண்டிய உதவிகளை செய்து தருமாறு கூடியதன் அடிப்படையில் பொதுமக்கள் மகிழ்ச்சியுடன் கலைந்து சென்றனர்.

# அனந்தபுரம் ரோட்டரி சமுதாய குழுமம் மற்றும் செக்கோவர் நிறுவனம் சார்பில் விருது வழங்கும் விழா



விழுப்புரம் மார்ச் 04:

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி செக்கோவர் தொண்டு நிறுவனம் அலுவலகத்தில் அனந்தபுரம் ரோட்டரி சமுதாய குழுமம் மற்றும் செஞ்சி செய்பவர் தொண்டு நிறுவனம் சார்பில் சிறந்த ஆசிரியர்களுக்கான விருது வழங்கும் விழா நடைபெற்றது.

இதில் செய்து செக்கோவர் நிறுவன இயக்குனர் அம்பிகா சூசை ராஜ் தலைமை தாங்கினார். ஆனந்தபுரம் ரோட்டரி சமுதாய குழுமத்தின் முன்னாள் தலைவர்ஜேசு ஜூலியஸ் ராஜா முன்னிலை வகித்தார்.

சிறப்பு அழைப்பாளராக இ கே ஆர் மருத்துவமனையின் நிர்வாக இயக்குனர் டாக்டர் ஆனந்த முருகன் கலந்து கொண்டு சிறந்த ஆசிரியர்களுக்கு விருது வழங்கி பாராட்டி சிறப்புரையாற்றினார்.

இதில் செஞ்சி தாலுக்கா விக்கிரவாண்டி தாலுக்கா பகுதிகளில் அரசு பள்ளிகளில் சிறப்பாக பணியாற்றிய ஆசிரியர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியை செக்கோவர் ஊழியர் சங்கீதா தொகுத்து வழங்கினார். நிகழ்ச்சியில் சூர்யா ரவீந்திரன் ராஜாராம் அரவிந்தன் குலசேகர் அரசு ராஜசேகர் சிவானந்தம் பிரசன்னா மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421